IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.453/2008
DEPOSITION OF WITNESS

ஆரம்ப நேரம்: 12.20 p.m.

பி.வா.சா. 2சாட்சி விஜயன் த.பெ.தர்மர்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 03.03.2026 in accordance with the provisions of Act XX141.**

2பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :

1. வாதிகள் என்ன பரிகாரம் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சொத்து வேண்டும் என்று கோரி தாக்கல் செய்துள்ளார்கள். தாவா வழக்கிற்கு நான் என்ன பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாவாச் சொத்தில் எங்களுக்கும் சரிபாதி சொத்து வேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன்.

2. வழக்குச் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எனது தாத்தாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். எனது தாத்தா பெயர் என்ன என்றால் ஆண்டி ஆகும். எனது தாத்தாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் மருதன், தர்மர், பஞ்சம்மாள், கட்டிபிள்ளை, போதும்பொண்ணு ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி பஞ்சம்மாள், கட்டிபிள்ளை, போதும்பொண்ணு ஆகியோருக்கு எந்த ஆண்டு திருமணம் நடந்தது என்றால் தெரியாது.

3. தற்போது எனக்கு எத்தனை வயது என்றால் 41 வயது ஆகும். பஞ்சம்மாள், கட்டிபிள்ளை, போதும்பொண்ணு ஆகியோருக்கு நான் பிறப்பதற்கு முன்பே திருமணம் நடந்திருக்குமா என்றால் தெரியாது. வழக்குச் சொத்து ஆண்டி பெயரில் உள்ளதற்கு ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. வழக்குச் சொத்திற்கு எனது பெரியப்பா மருதன் மற்றும் அவருடைய மனைவி சிட்டம்மாள் என்ன பதில்மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன்.

4. எத்தனை இலக்கச் சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 9இலக்கச் சொத்தாகும். மேற்படி 9இலக்கச் சொத்துக்களும் எந்த சர்வே எண்ணில் கட்டுப்பட்டுள்ளது என்றால் சர்வே எண் 246ல் 2இலக்கச் சொத்தாகும். மேற்படி 2இலக்கச் சொத்துக்களும் எந்த உட்பிரிவில் கட்டுப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

5. சர்வே எண் 246, 248, 253, 254 ஆகிய 4 சர்வே எண்களில்தான் 9இலக்கச் சொத்துக்களும் அடங்கியுள்ளது என்றால் சரிதான். மேற்படி 9இலக்கச் சொத்துக்களும் எந்த உட்பிரிவில் அடங்கியுள்ளது என்று குறிப்பிட்டு கூறமுடியுமா என்றால் தெரியாது. தாவாச் சொத்துக்களில் 1,2 மற்றும் 6இலக்கச் சொத்துக்களில் இந்நிர் 1ம்வாதி மற்றும் 2முதல் 4வரையுள்ள வாதிகளின் முன்பாத்தியஸ்தர்களான ஆறுமுகம் மற்றும் 1ம்பிரதிவாதி ஆகிய 3பேரும் சேர்ந்து 22.06.1987ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலமாக 2மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு தகுந்த மறுபயனுக்காக கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

6. மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு 1,2,6 இலக்கச் சொத்துக்களை 2 மற்றும் 4 பிரதிவாதிகள் மட்டுமே தங்களின் தனித்த சுவாதீனத்தில்

அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1,2,6 இலக்கச் சொத்துக்களில் எனது தாத்தா ஆண்டி அவருடைய பங்கை கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் மேற்சொன்ன சொத்துக்களை பொறுத்து எனக்கோ, எனது முன்பாத்தியஸ்தர்களுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

7. 1,2,6 இலக்கச் சொத்துக்களில் எனது தாத்தா ஆண்டி 2 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் ஆண்டியின் ஆண் மற்றும் பெண்வாரிசுகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா 4ம் இலக்கச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 6 ஏக்கர் ஆகும். தாவா 4ம் இலக்கச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 96 சென்டு என்றால் சரியல்ல.

8. மேற்படி 1 ஏக்கர் 96 சென்டை 3சம பாகங்களாக பிரித்து 1ம்வாதிக்கு 1 பாகமும், மேற்படி ஆறுமுகத்திற்கு 1பாகமும், 1ம்பிரதிவாதிக்கு 1பாகமும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா 4ம் இலக்கச் சொத்தில் 1ம்பிரதிவாதிக்கு கிடைத்த 1பாகத்தை 1ம்பிரதிவாதியும், அவரது ஆண்வாரிசுகளான 2,3 பிரதிவாதிகள் சேர்ந்து 4ம்பிரதிவாதிக்கு 24.4.2000, 10.4.2004 ஆகிய தேதிகளில் பதிவு செய்யப்பட்ட கிரையம் ஆவணம் மூலமாக கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல.

9. மேற்படி கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 4ம்பிரதிவாதிதான் தனித்த சுவாதீனமாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி தேதியிட்ட 2 கிரைய ஆவணங்களின் மூலம் 4ம்பிரதிவாதிக்கு எனது தந்தையே கிரையம் செய்து கொடுத்துவிட்டதால் 4ம்இலக்கச் சொத்தில் எனக்கு பாத்தியம் இல்லை என்றால் சரியல்ல.

10. 5ம்இலக்கச் சொத்து ஆதியில் குப்பண்சாமான் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் தெரியாது. மேற்படி குப்பண்சாமான் என்பவர் கருப்பணன்சாமான் என்பவருக்கு கிரையம் கொடுத்த சொத்து என்றால் சரியல்ல. 5ம்இலக்கச் சொத்தை 1ம்வாதி 2முதல் 4 வாதிகளின் முன்பாத்தியஸ்தரான ஆறுமுகம் மற்றும் 1ம்பிரதிவாதியும் அவரது வாரிசுகளும் ஆறுமுகம் செட்டியார் என்பவருக்கு 2002ம் வருடம் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலமாக உரிமை மாற்றம் செய்துவிட்டார்கள் என்றால் தெரியாது.

11. 5ம்இலக்கச் சொத்தை பொறுத்து வாதிகளுக்கு, பிரதிவாதிகளுக்கோ எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. 7ம்இலக்கச் சொத்தின் விஸ்தீரணம் 45 செண்டு என்றால் தெரியாது. மேற்படி 45 செண்டு கருப்பணன் வாரிசுகளான ஆறுமுகம், முத்தன், ஆண்டி ஆகிய 3பேரும் சமபாகமாக பிரித்துக்கொண்டனர் என்றால் சரியல்ல, ஆனால் ஒன்றாக அனுபவம் செய்து வருகிறார்கள்.

12. ஆறுமுகம், முத்தன், ஆண்டி ஆகிய 3பேர் பெயர்களிலும் வருவாய் ஆவணங்கள் ஏற்பட்டு தனித்தனியாக பெயர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண் 253/2A என்பது ஆறுமுகம் என்பவர் பெயரிலும், சர்வே எண் 253/2B என்பது 1ம்பிரதிவாதியான ஆண்டி என்பவரின் பெயரிலும் சர்வே எண் 253/2C என்பது 1ம்வாதியின் தந்தை பெயரிலும் தனித்தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

13. 1ம்பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்ற சர்வே எண் 253/2Bல் கூறப்பட்டுள்ள சொத்தினை 2ம்பிரதிவாதியான மருதனும், 3ம்பிரதிவாதியான தர்மர் ஆகிய 2பேரும் இருசமபாகங்களாக பிரித்து

அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா 8ம்இலக்கச் சொத்தின் மொத்த விஸ்தீரணம் 44 செண்டு என்றால் சரியல்ல. மேற்படி 44 செண்டையும் 1ம்வாதி மற்றும் மேற்படி ஆறுமுகம் 1முதல் 3பிரதிவாதிகள் சேர்ந்து 26.7.1988ல் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் மூலமாக இந்நிர் 4ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தார்கள் என்றால் சரியல்ல.

14. மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு இந்நிர் 4ம்பிரதிவாதிதான் தாவா 8ம்இலக்கச் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அனைவரும் அனுபவம் செய்து வருவதாக வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா 9ம்இலக்கச் சொத்து குப்பண்சாமான் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

15. மேற்படி குப்பண்சாமான் காலத்திற்கு பின்னிட்டு அவருடைய மனைவி, மகன் அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் தெரியாது. மேற்படி குப்பண்சாமான் மனைவி மற்றும் மகன் ஆகிய இருவரும் சேர்ந்து 28.3.1988ல் பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் இந்நிர் 4ம்பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது.

16. மேற்படி கிரையத்திற்கு பின்னிட்டு மேற்சொன்ன 9இலக்கச் சொத்தையும் இந்நிர் 4ம்பிரதிவாதிதான் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தாவா 3ம்இலக்கச் சொத்தில் பெரியார் வைகை கால்வாய் செல்கிறது என்றால் தெரியாது. மேற்படி கால்வாய்க்காக தாவா 3ம்இலக்கச் சொத்தானது நிலஆர்ஜிதம் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

17. மேற்படி நிலஆர்ஜிதத்திற்கான இழப்பீட்டு தொகையை வாதிகளே பெற்றுக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. திருத்தம் செய்யப்பட்ட இந்து

வாரிசுரிமை சட்டம் 39/2005 20.12.2004க்கு முன்பே தாவாச்சொத்துக்களை பொறுத்து பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வில்லங்கம் ஏற்பட்டதால் மேற்படி வில்லங்கத்தினை பொறுத்த சொத்தில் எவ்வித உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4ம்பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2ம்பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

**12 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

12 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் இல்லை. அசல் வழக்கானது கடந்த 2008 முதல் நிலுவையில் இருந்து வருவதை கருத்திற்கொண்டு நீதியின் நலன்பொருட்டு 12 முதல் 14 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையானது முடித்து வைக்கப்படுகிறது.

**மறுவிசாரணை: இல்லை.**

முடிவடையும் நேரம்: 1.05 p.m.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை
தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி
அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்
கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.03.03 17:49:56 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),
திருமங்கலம்.